**PROCEEDINGS OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING THE EVIRONMENTAL CLEARANCE FROM THE STATE ENVIRONMENTAL IMPACT ASSESMENT AUTHORITY (SEIAA-TN) FOR PROPOSED MINING PROJECT OF THE UNIT M/S. SHRI NATURAL STONES (ROUGH STONE QUARRY) IN THE SURVEY NUMBERS: 738(PART-2) LEASE OVER AN EXTENT OF 2.00.0 HA AT THANDARAI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT.**

**Name of the Project:** Proposed to mining project of rough stone quarry with an extent of 2.00.0 hectares by the unit m/s. Shri Natural Stones (Rough Stone Quarry) in the survey numbers: 738 (part-2), Thandarai Village, Denkanikottai Taluk, Krishnagiri District.

**Venue:** M/s. BA Function Hall, SF.No. 181, 182, Chinna Bennangur Village, Hosur Main Road, Denkanikottai Taluk, Krishnagiri District

**Date & Time:** **10.07.2026** – 11:00 AM

**Present:**

| | | |
|---|---|---|
| 1. | Tmt. Akrithi Sethi, IAS | Revenue Divisional officer, Hosur |
| 2. | Er.Purushothaman, B.Tech, M.E. | District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur |
| 3. | Er.M.Silambarasan, M.E., | Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur. |
| 4. | Thiru.M.N.Ravikumar | The proprietor, M/s. Shri Natural Stones (Rough stone quarry), S.F. No. 738(Part-2) at Thandarai Village, Denkanikottai Taluk, Krishnagiri District. |
| 5. | Thiru.K.Vijayaragavan | Field Expert member in the M/s. Geotechnical Mining Solutions, Dharmapuri for the Preparation of |

| | | |
|---|---|---|
| | | Environmental Impact Assessment (EIA) Report for this Project. |
| 6. | Public and Environmentalists | 86 Persons (List Enclosed) |

The District Environmental Engineer (DEE), Tamil Nadu Pollution Control Board, Krishnagiri District has welcomed the Revenue Divisional officer, Hosur, Government Officials, General Public and NGO's/ Environmentalist for the Public hearing and informed that the unit of M/s. Shri Natural Stones (Rough stone quarry), S.F. No. 738(Part-2) at Thandarai Village, Denkanikottai Taluk, Krishnagiri District has proposed to Mining project of Rough Stone Quarry. This activity attracts Environmental Impact Assessment Notification 2006, as amended under the category "B1" in the schedule 1(a) of the said notification.

Furthermore, the DEE, TNPCB, Hosur, has informed that the SEIAA-TN issued the Terms of Reference (ToR) with a public hearing for preparing the Environmental Impact Assessment (EIA) report for the aforementioned activity under the Environmental Impact Assessment Notification, 2006 on 16.10.2025. The project proponent has submitted the draft EIA report to the office of the DEE, TNPCB, Hosur. A public notice for the public hearing, scheduled on 27.05.2026, was published in *"The New Indian Express"* and "*Dhinathanthi*" on 03.06.2026 with the approval of the District Collector, Krishnagiri. This public hearing is for the proposed industry of M/s. Shri Natural Stones (Rough Stone Quarry), and public announcements have been made via loudspeakers and pamphlets distributed in the surrounding villages.

The District Environmental Engineer has informed that the details of the proposed project and the Environmental Impact Assessment (EIA) study conducted by the EIA Co-ordinator will be explained through a Power Point presentation by the project proponent/EIA Co-ordinator. Furthermore, the DEE stated that after the presentation, the public can express their views, suggestions, and comments on the project, either verbally or in writing, one by one. Additionally, DEE has informed that the opinions and suggestions of the public and environmentalists will be recorded and forwarded to the SEIAA-TN.

The Revenue Divisional officer, Hosur has requested the project proponent EIA Consultant to explain the detail of the project and the EIA study conducted by them to the public in detail.

Mr. K. Vijayaraghavan, Field Expert member for the Preparation of the Environmental Impact Assessment (EIA) Report, M/s. Geotechnical Mining Solutions, Dharmapuri, welcomed the Sub-Collector, Hosur, the District Environmental Engineer, environmental enthusiasts, government officials from various departments, and the general public who participated in the meeting. He then presented a detailed explanation of the proposed project through a visual presentation.

The Revenue Divisional officer, Hosur has invited members of the public to present their views, suggestions, or comments regarding the above said proposal/project in a detailed and organized manner. Participants may express their opinions either verbally or in writing. Before presenting, individuals are kindly requested to provide their full name and address for official records.

1. **Mr. Manjunath, Adavisamipuram Village (First Time):**
   - He stated that the well-known Sri Madhanagiri Muniswaraswamy Temple, which is famous across three states, is located near this quarry. He expressed concern that if the quarry becomes operational, the temple may be affected.
   - He further mentioned that a river named Sanathkumar, flowing from Thali to Panchapalli, is situated within 300 meters of the quarry site, and its flow may also be impacted due to quarry operations.
   - He also informed that about 15 days ago, 40 pattas were issued in Survey No. 738 near the quarry, and it is expected that around 100 residential units may be developed there. In such a case, the public residing in these houses may be affected by the quarry operations.
   - He stated that blasting activities generate black smoke, leading to pollution.
   - He further mentioned that he had participated in protests against the quarry and was imprisoned during the period 2022–2023.
   - Finally, he requested that permission should not be granted for the operation of this quarry.

2. **Mr. Jegatheesh, Adavisamipuram Village:**
   - He stated that the remarks made by Mr. Manjunath are completely false and clarified that there are no issues arising due to the quarry operations.

- He mentioned that problems occur only during blasting activities and that there are no other impacts.
- He further stated that he is working in the said quarry and that around 50 to 55 people are employed through the quarry. Additionally, he informed that no water-related issues have been experienced due to the quarry operations.

3. **Mr. Duraisamy, Thandarai Village (Former Panchayat President) – (First Time):**
   - He stated that the proposed quarry project would help improve the basic infrastructure facilities of the villages under Thandarai Panchayat.
   - He further mentioned that many youths from the village migrate to neighbouring states in search of employment, and providing jobs in the quarry would be beneficial. He added that the quarry would generate employment opportunities for the youth and would not cause any adverse impacts.

4. **Mr. Murali, Adavisamipuram Village:**
   - He stated that he is a doctor and mentioned that the stone quarry is beneficial to the youth and economically weaker sections, and that there are no issues associated with it.
   - He further stated that the quarry provides employment opportunities, which in turn contributes to the development of the villages.

5. **Mr. Seenappa, Adavisamipuram Village:**

   He stated that his residence is located near the stone quarry and that no adverse impacts have been experienced due to the quarry operations.

6. **Mr. Madhukumar, Adavisamipuram Village:**
   - He stated that his residence is located near the stone quarry and that no adverse impacts have been experienced due to the quarry operations.
   - He mentioned that around 60 youths above the age of 20 are employed in the quarry. He further informed that there are about 75 families in his

village, of which only 5 households possess patta land, while the remaining residents depend on daily wage labor.

- He also stated that for the past 9 years, the quarry owner has been supporting economically weaker sections by providing jelly stones and M-sand at subsidized rates for house construction.
- Additionally, he mentioned that the quarry owner contributed to the construction of 1,500 steps for a 50-year-old temple and assisted in road restoration works by supplying 500 Liters of diesel for machinery (Hitachi equipment).

**7. Mr. Balaji, Thandarai Village:**

- He stated that the Muniswarar Temple is being affected due to the quarry operations. He further mentioned that around 150 houses surrounding the quarry are impacted and that protests had already been conducted earlier at a place called Kurattukal against the quarry.
- He added that residents of the neighbouring villages are also affected and requested that the proposed quarry project should not be granted approval.

**8. Mr. Duraisamy, Thandarai Village (Former Panchayat President) (Second Time):**

- He stated that he is a member of the temple trust committee and mentioned that the quarry contributes to the development of the hills surrounding the temple.
- He further stated that the quarry project does not cause any adverse impacts and reiterated his opinion for the second time.

**9. Mr. Manjunath, Adavisamipuram Village (Second Time):**

- He stated that there are issues associated with the quarry and alleged that many of those who spoke earlier are individuals who have leased their lands or stone resources to the quarry and hence are speaking in favour of the project due to the income they receive. He asserted that, in reality, the quarry operations are adversely affecting livelihoods.

- He further mentioned that during the year 2023, he had protested against the quarry project and that more than 15 cases have been registered against him in connection with such protests. He alleged that the quarry owners resort to intimidation, including threats, coercion, and false allegations against those who oppose them. He also stated that he attends court proceedings approximately four times a month.
- He expressed that if the quarry is permitted, the lives of economically weaker sections would be severely affected and that his own livelihood has already been impacted. He requested that the well-known temple and the river in the area be protected and strongly urged that the quarry project should not be permitted.
- He also requested that measurements be carried out in the areas surrounding the quarry through the Village Administrative Officer (VAO), and that officials may conduct a direct field inspection. He stated that he is willing to accept the findings if his claims are proven incorrect upon inspection.
- He further cautioned that the area may turn into a barren land and added that since the land is classified as grazing poramboke, it should be used only for grazing purposes and not be permitted for quarry operations.

**10. Mr. Siva, Jakkeri Village:**

He stated that there are no adverse impacts due to the quarry project and expressed that permission may be granted for the operation of the quarry.

**11. Mr. Manjunath, Adavisamipuram Village:**

- He stated that he owns 3 acres of land near the quarry and has been carrying out agricultural activities there for the past 50 years. He further mentioned that many others are also engaged in cultivation on nearby poramboke lands. Taking all these factors into consideration, he expressed that the quarry project should not be permitted.
- He added that if the quarry becomes operational, blasting activities may cause stones to be projected towards nearby houses, leading to structural cracks and related issues. In view of such concerns, he requested that the quarry project should not be allowed.

**12. Mr. Devaraj, Adavisamipuram Village:**

He stated that he regularly grazes about 100 sheep and 40 cattle in the areas surrounding the quarry. He further mentioned that approximately 40 cattle and 150 sheep grazes around the quarry and that his livestock also drink water near the quarry site. He expressed that no adverse impacts have been experienced due to the quarry operation.

**13. Mr. Thimmaraj, Adavisamipuram Village:**

He stated that his residence is located at a distance of about 150 meters from the quarry and that no adverse impacts have been experienced due to the quarry operations. He further mentioned that during times of water scarcity, the quarry provides water support.

**14. Mr. Thimmappa, Kamanapalayam Village:**

He stated that his residence is located near the quarry and that there are no adverse impacts due to the quarry project. He further expressed that permission may be granted for the operation of the quarry.

**15. Mr.Nagaraj Reddy, Marudhandapalli Village:**

- He stated that he has been protesting against the quarry operations since 2022 and that there are numerous issues associated with the quarry. He mentioned that there are temples, a river, and residential villages located near the quarry site. He alleged that meetings are being conducted secretly without proper intimation to the public.
- He further stated that the quarry is not being operated in a proper manner and requested that a direct field inspection be carried out. He informed that despite continuously protesting against the quarry for the past four years (since 2022–2023), no action has been taken so far.
- He also mentioned that during blasting operations, his house located about 15 km away developed cracks. Additionally, he stated that heavy vehicles are transporting loads beyond permissible limits, which is causing significant inconvenie.nce and impact to the villagers.

**16. Mr.Sivaraj, Jegarupalli Village:**

- He stated that about 60–70 families are benefitting and sustaining their livelihood through the quarry operations.
- He further mentioned that the quarry provides employment opportunities and that no adverse impacts have been observed.

**17. Mr.Vinoth, Adaikalapuram Village:**

- He expressed his support for the proposed project and stated that he resides near the quarry and is also employed there. He mentioned that during blasting operations, water is sprinkled within the quarry to prevent any adverse impacts. He further stated that water is also sprayed on the roads during the movement of heavy vehicles to control dust.
- He clarified that the recent protest held at a place called Kurattukal was not against the quarry operations but was conducted to regulate the movement of heavy vehicles within the village and to ensure that they are operated in a proper manner.

**18. Mrs.Jaya Nagaraj Reddy, Marudhandapalli Village:**

- She stated that although the public hearing primarily concerns the people of Thandarai Village, many of them were not aware that such a meeting was being conducted. She alleged that the meeting was held at a location that was not easily accessible or known to the public. She further mentioned that protests have been ongoing since 2022.
- She clarified that she is not opposed to the crusher unit itself but alleged that the crusher is extracting minerals in excess of permissible limits and violating government regulations. She further alleged that explosives are not being used in accordance with the prescribed norms. She also stated that heavy vehicles transporting minerals are carrying loads beyond permissible limits and that there is excessive movement of such vehicles. In this regard, she mentioned that an 8-day continuous protest was carried out in 2022.

- She stated that the claim made by a previous speaker—that the recent protest at Kurattukal was only regarding the regulation of heavy vehicle movement and not against the quarry operations—is completely incorrect. She asserted that the quarry operations are causing respiratory issues among children and that two pregnant women reportedly suffered miscarriages. She also mentioned that a petition was submitted in this regard in 2022.
- She further stated that due to lack of prior intimation about the meeting, she was unable to bring documentary evidence related to earlier petitions. she alleged that the claim of employment generation through the crusher is false, stating that most of the workers are from other states. She also mentioned that livestock rearing has been affected due to the quarry, thereby impacting the local economy.
- She alleged that explosives are being used in quantities exceeding those prescribed by the Mining Department. She further stated that the Thandarai Panchayat has not benefited in terms of development due to the crusher operations. She also expressed concern that groundwater resources are being adversely affected. In view of the above, she requested that permission should not be granted for the quarry operations as they are being carried out in violation of government regulations.

**19. Mr.Muniraj, Adavisamipuram Village:**

- He stated that his land is located near the survey number where the proposed quarry is situated and that no adverse impacts have been experienced due to the quarry.
- He mentioned that even when complaints are raised regarding the crusher, the owner resolves such issues amicably.
- He advised that water should be regularly sprinkled on the roads used by heavy vehicles to control dust. He further requested that the quarry be operated in such a manner as to prevent any issues from arising in the future.

**20. Mr.Muniraj, Adavisamipuram Village (Different Person):**

- He stated that he has been working in the quarry for the past 8 years. He further mentioned that his residence is located about 200 meters away from the quarry and that no adverse impacts have been experienced due to the quarry operations.

**Thereafter no views/comments were received from the public.**

Further, 07 Written petitions were also received during the public hearing meeting regarding the proposed M/s. Shri Natural Stones (Rough stone quarry) project.

The District Environmental Engineer (DEE), TNPCB, Hosur, summarized the responses of the public regarding the project and informed that these have been recorded through videography and will be submitted to the State Environmental Impact Assessment Authority, Tamil Nadu, along with the written representations received from the public.

Further, it was informed that a copy of the proceedings of this public hearing meeting will be made available for public reference at the Krishnagiri District Collectorate, Krishnagiri, Thally Panchayat Union Office, Denkanikottai Taluk Office, Thandarai Village Panchayat Office and the Office of the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur. The same will also be uploaded on the Tamil Nadu Pollution Control Board website (www.tnpcb.gov.in).

It was also stated that any comments on the proceedings may be submitted directly to the Member Secretary, State Environmental Impact Assessment Authority, Tamil Nadu / MoEF&CC, as well as to the concerned project proponent. This was informed by the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur.

Finally, the Revenue Divisional Officer stated that any further comments, if any, may be submitted in writing as per the guidelines/procedure mentioned in the EIA Notification 2006.

13/07/26

**District Environmental Engineer,**
**Tamilnadu Pollution Control Board,**
**Hosur**

13/7/26

**Revenue Divisional officer,**
**Hosur**

13/7/26

**District Collector**
**Krishnagiri District**



A16

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 27.05.2026 for notifying the public hearing meeting.
2. Attendance sheet at the public hearing (Total pages 11 & 100 Persons).
3. Audio & Video stored in the Pen drive of the public hearing proceedings.
4. Photographs of the public hearing proceedings.
5. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. Petitions received from the public / NGO / Environmentalist through E-mail, Postal and in the public hearing meeting – 15 Nos.

**கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தண்டரை கிராமம், சர்வே. எண் 738 (பகுதி-2)-ல் 2.00.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ் என்ற நிறுவனத்தார் உத்தேசிக்கப்பட்டுள்ள– சாதாரண கற்கள் வெட்டி எடுப்பது குறித்து மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின், சுற்றுசூழல் தாக்க அறிவிக்கை 2006 கீழ் அவசியமான சுற்றுச்சூழல் முன் அனுமதி பெறுதல் தொடர்பாக 10.07.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்ட நடவடிக்கையின் விவரங்கள்:**

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர்: | கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தண்டரை கிராமம், சர்வே. எண் 738 (பகுதி – 2) ல் 2.00.0 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ் – சாதாரண கற்கள் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| இடம்: | தி /ள். பி.ஏ. ஃபங்ஷன் ஹால்,<br>எண். 181, 182,<br>சின்ன பென்னங்கூர் கிராமம்,<br>ஓசூர் மெயின் ரோடு,<br>தேன்கனிக்கோட்டை வட்டம்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 107 |
| நாள் மற்றும் நேரம் : | 10/07/2026 – காலை 11.00 மணி |

**<u>பங்கேற்றோர்:</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. ஆக்ரிதி சேத்தி, IAS., | : | சார் ஆட்சியர்,<br>ஓசூர்,<br>கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 2 | Er.வி.புருஷோத்தமன், B.Tech, M.E., | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 3 | Er.மு.சிலம்பரசன், M.E., | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம். |
| 4 | திரு.M.N ரவிக்குமார் | : | உரிமையாளர்,<br>தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ்,<br>சாதாரண கற்கள் குவாரி. |
| 5 | திரு.க.விஜயராகவன் | : | இந்த உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரிக்கான சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர்.<br>தி/ள். ஜியோ டெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி |
| 6 | பொதுமக்கள் | : | 86 எண்ணிக்கை (வருகை பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது). |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள், சுற்றுச்சூழல் அனுமதிபெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் மதிப்பிற்குரிய சார் ஆட்சியர் ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்களையும், பங்கேற்கவந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் வரவேற்று கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், தண்டரை கிராமம்,

தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ் – சாதாரண கற்கள் குவாரி, சர்வே. எண் 738 (பகுதி – 2) ல் 2.00.00 ஹெக்டேர் பரப்பளவில் சாதாரண கற்கள் வெட்டி எடுப்பதற்க்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்து, கீழ்க்கண்ட விபரங்களையும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன்படி வகை B1 மற்றும் அட்டவணை 1(a) இன் கீழ் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தின் செயல்பாட்டிற்கான சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையை மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தி தயாரிப்பிற்கான குறிப்பு விதிமுறைகளை Terms of Reference (TOR) 16.10.2025 அன்று வழங்கியுள்ளது.

மேலும், நிறுவனம் வரைவு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரித்து பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்த தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இப்பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெறவிருக்கிறது.

இதுதொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி, தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ் – சாதாரண கற்கள் குவாரி நிறுவனத்திற்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டமானது கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், சின்ன பென்னங்கூர் கிராமம், தி /ள். பி.ஏ. ஃபங்ஷன் ஹாலில் 10.07.2026 அன்று முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும் என்று

"தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" மற்றும் "தினத்தந்தி" ஆங்கில மற்றும் தமிழ் நாளேடுகளில் 03.06.2026 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது. மேலும் அப்பகுதியிலுள்ள மக்களுக்கு இத்தகவல் ஒலிபெருக்கி மற்றும் துண்டுப்பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர், இக்கூட்டத்தில் தி/ள். ஸ்ரீ நேச்சுரல் ஸ்டோன்ஸ் – சாதாரண கற்கள் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர், தி/ள். ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை விரிவாக எடுத்துரைப்பார்கள் என்று கூறினார். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். தங்களுடைய கருத்துக்கள் முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர் ஒசூர், அவர்கள் இத்திட்டத்தின் விவரம் மற்றும் திட்டத்தின் நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை தொடர்பான விவரங்களையும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார்.

திரு.க.விஜயராகவன் சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை தயாரிக்கும் வல்லுநர் குழு உறுப்பினர், தி/ள் ஜியோடெக்னிக்கல் மைனிங் சொலுஷன்ஸ், தருமபுரி அவர்கள் சார் ஆட்சியர் ஓசூர், அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

அதன்பின்னர் சார் ஆட்சியர் ஓசூர், அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. <u>திரு. மஞ்சுநாத், அடவிசாமிபுரம் கிராமம்.</u>

(முதல்முறை பேசினார்)

இவர் இக்குவாரிக்கு அருகில் மூன்று மாநிலத்திற்கும் பிரசித்தி பெற்ற ஸ்ரீ மதனகிரி முனிஸ்வரசுவாமி கோயில் உள்ளது. இக்குவாரி செயல்பட்டால் கோயில் பாதிக்கப்படும் என்றும், 300 மீட்டர் அருகில் உள்ள சனத்குமார் எனும் நதி தளியிலிருந்து பஞ்சப்பள்ளி வரை பாயக்கூடியது என்றும் குவாரி

செயல்பாட்டால் அந்த நதி பாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். 15 நாட்களுக்கு முன்பு குவாரிக்கு அருகில் உள்ள சர்வே எண் 738ல் 40 பட்டாக்கள் வழங்கப்பட்டன, அதில் 100 குடியிருப்புகள் வரும் என எதிர் பார்க்கப்படுகிறது. குடியிருப்புகள் வரும்பட்சத்தில் குவாரியின் செயல்பாட்டால் பொதுமக்கள் பாதிப்படையலாம் என்றும் தெரிவித்தார். வெடி வைக்கும் பொழுது ஏற்படும் கரும்புகையால் மாசு ஏற்படுகிறது. இதனால் குவாரிக்கு எதிராக போரட்டம் நடத்தி 2022-2023 காலகட்டத்தில் சிறை சென்றதாக கூறினார். எனவே, இக்குவாரிக்கு உரிமை வழங்கப்பட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார்.

2. <u>திரு. ஜெகதீஷ், அடவிசாமிபுரம் கிராமம்.</u>

இவர் திரு. மஞ்சநாத் அவர்கள் கூறிய கருத்தை முற்றிலும் பொய் என்று கூறி, குவாரி வருவதினால் எந்த வித பிரச்சனையும் இல்லை என்றும் குவாரிக்கு வெடி வைக்கும் பொழுது மட்டும் பிரச்சனை ஏற்படுகிறது, மற்றப்படி எந்த பாதிப்பும் இல்லை தான் அந்த குவாரியில் வேலை செய்வதாகவும் மற்றும் 50 லிருந்து 55 பேர் குவாரி மூலம் வேலைவாய்ப்பு பெறுவதாகவும் கூறினார். மேலும், தண்ணீர் பிரச்சனைகள் எதுவும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தார்.

3. <u>திரு.துரைசாமி, தண்டரை கிராமம் (முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்)</u>
(முதல்முறை பேசினார்)

இவர் இக்குவாரி திட்டத்தினால் தண்டரை ஊராட்சி கிராமங்களின் அடிப்படை வசதிகள் மேம்படும் என்றும், கிராமத்தின் இளைஞர்கள் அண்டை மாநிலத்திற்கு வேலைத் தேடி செல்வதால் குவாரியில் வேலை கொடுத்தால்

நன்றாக இருக்கும் என்று தெரிவித்தார். குவாரியினால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமே தவிர, பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று கூறினார்.

4. **<u>திரு. முரளி, அடவிசாமிபுரம் கிராமம்.</u>**

இவர் தான் ஒரு மருத்துவர் எனவும், இக்கல்குவாரி இளைஞர்களுக்கும், சிறுகுடி மக்களுக்கும் உதவியாக உள்ளது பிரச்சனைய எதுவும் இல்லை என்று கூறினார். மேலும், இக்குவாரியினால் வேலைவாய்ப்பு கிடைக்கிறது, இதனால் கிராமங்கள் மேம்பாடு அடையும் எனவும் கூறினார்.

5. **<u>திரு. சீனப்பா, அடவிசாமிபுரம் கிராமம்.</u>**

இக்கல்குவாரி அருகில் தான் தனது வீடு இருப்பதாகவும், குவாரியினால் பாதிப்புகள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்தார்.

6. **<u>திரு.மதுகுமார், அடவிசாமிபுரம், கிராமம்.</u>**

இக்கல்குவாரி அருகில் தனது வீடு இருப்பதாகவும் குவாரியினால் பாதிப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவித்தார். 20 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் 60 பேர் வரை குவாரியில் வேலைவாய்ப்பு பெறுவதாக தெரிவித்தார். தன் கிராமத்தில் 75 குடும்பங்கள் உள்ளது, 5 வீடுகள் மட்டுமே பட்டா நிலங்கள் கொண்டவை, மற்றோர் கூலி வேலை செய்வதாகவும் தெரிவித்தார். ஏழைகள் வீடு கட்டும் போது ஜல்லிகள் மற்றும் எம் சாண்டுகள் மலிவு விலைக்கு குவாரி உரிமையாளர் கடந்த 9 வருடங்களாக கொடுத்து உதவுவதாக தெரிவித்தார். 50 வருட பழைமையான கோவிலுக்கு 1500 படிக்கட்டுகள் அமைத்தும், குவாரிக்கு உரிமையான

ஹிட்டாச்சியில் 500 லிட்டர் டீசல் போட்டு பாதைகள் புனரமைப்பு செய்தும் குவாரி உரிமையாளர் உதவியதாக தெரிவித்தார்.

7. **<u>திரு. பாலாஜி, தண்டரை கிராமம்.</u>**

இவர் இக்குவாரி திட்டத்தால் குவாரிக்கு அருகில் உள்ள முனீஸ்வர சுவாமி கோவில் பாதிக்கப்படுவதாக தெரிவித்தார். குவாரியை சுற்றி உள்ள 150 வீடுகள் பாதிக்கப்படுவதாக, ஏற்கனவே குவாரிக்கு எதிராக குரட்டுக்கள் என்ற இடத்தில் போராட்டம் நடத்த்தியதாக தெரிவித்தார். பக்கத்து ஊர் மக்களும் பதிப்படைவதாக கூறி தயவு செய்து இக்குவாரி திட்டத்திற்கு ஆதரவு தர வேண்டாம் என்று கூறினார்.

8. **<u>திரு. துரைசாமி, தண்டரை கிராமம் (முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்).</u>**

(இரண்டாவது முறையாக பேசினார்)

தான் கோவில் டிரஸ்ட் குழுவில் உறுப்பினராக இருப்பதாகவும் இக்குவாரி மூலமாக கோவில் சுற்றி உள்ள மலைகளை மேம்படுத்துவதாகவும் தெரிவித்தார். எனவே குவாரி திட்டத்தினால் எந்த பாதிப்பும் இல்லை, என தன் கருத்தை இரண்டாவது முறையாக தெரிவித்தார்.

9. **<u>திரு. மஞ்சுநாத், அடவிசாமிபுரம் கிராமம்.</u>**

(இரண்டாவது முறையாக பேசினார்)

குவாரியில் பிரச்சனை இருப்பதாகவும், இதற்கு முன் பேசியவர்கள் பாதி பேர் கற்கள் அல்லது இடத்திற்காக குவாரிக்கு குத்தகை விட்டவர்கள் என தெரிவித்தார். அவர்களுக்கு வருமானம் வருவதால் குவாரி திட்டத்துக்கு சாதகமாக பேசுகிறார்கள் ஆனால் உண்மையில் குவாரியினால் வாழ்வாதாரம்

பாதிக்கிறது என தெரிவித்தார். 2023 காலகட்டத்தில் இக்குவாரி திட்டத்திற்கு எதிராக போராடி தன் மேல் 15 க்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவாகி உள்ளதாக தெரிவித்தார். குவாரி உரிமையாளர்கள் மனிதர்கள் கிடையாது எதிர்த்து கேள்வி கேட்டால் கொன்று விடுவார்கள், அடக்கு முறை செய்வார்கள், வீண்பழி போட்டு அராஜகம் செய்வார்கள் என்று கூறினார். மாதத்திற்க்கு 4 வாய்தா சென்று வருவதாக கூறினார். இக்குவாரி அமைந்தால் ஏழைகள் வாழ்வு கேள்விக்குறியாகிவிடும் என்றும் தன் வாழ்வாதாரம் அழிந்து விட்டதாகவும் கூறினார். பிரசித்தி பெற்ற கோவிலையும் நதியையும் காப்பாற்ற வேண்டும் என்பதால் தயவு செய்து கேட்டுக்கொள்ளகிறேன் இக்குவாரி திட்டம் எங்களுக்கு வேண்டாம் என்று கூறினார். விஏஓ மூலம் குவாரி சுற்றி உள்ள பகுதிகளில் அளவீடுகள் மேற்கொள்ளுமாறும், தாங்களும் நேரில் ஆய்வு செய்யுமாறும் ஆய்வில், தன் கருத்தில் தவறு இருந்தால் அதை ஏற்றுக்கொள்ளவதாகவும் தெரிவித்தார். குவாரியினால் அந்த இடம் பாலைவனமாக மாறுவதாகவும் தெரிவித்தார். மேய்ச்சல் புறம்போக்கு என்பதால் மேய்ச்சலுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும் எனவும் குவாரி திட்டத்திற்கு அனுமதிக்க கூடாது எனவும் வேண்டுதல் வைத்தார்.

10. <u>திரு. சிவா, ஜக்கேரி கிராமம்.</u>

இக்குவாரி திட்டத்தால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் குவாரி இயக்கத்திற்கு அனுமதி கொடுக்கலாம் என்றும் கூறினார்.

11. **திரு. மஞ்சுநாத், அடவிசாமிபுரம் கிராமம் (மற்றொருவர்)**

குவாரிக்கு அருகில் தனது 3 ஏக்கர் நிலம் உள்ளதாகவும் அதில் 50 வருடங்களாக விவசாயம் செய்வதாகவும் தெரிவித்தார். தன் நிலத்திற்கு அருகில் நிறைய பேர் புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்வதாகவுவும் இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு இக்குவாரி வேண்டாம் என்றும் கூறினார். குவாரி செயல்பட்டால் வெடி வெடிக்கும் போது கற்கள் வீட்டிற்கு வரும், வீடுகளில் விரிசல்கள் ஏற்படும் இது போன்ற பிரச்சனைகள் உள்ளதால் தயவு செய்து இக்குவாரி திட்டம் வேண்டாம் என்று கூறினார்.

12. **திரு. தேவராஜ், அடவிசாமிபுரம் கிராமம்**

தான் அன்றாடம் 100 செம்மறி ஆடுகள் 40 மாடுகள் குவாரி சுற்றி உள்ள பகுதிகளில் மேய்ச்சல் செய்வதாக தெரிவித்தார். 40 மாடுகள், 150 ஆடுகள் குவாரி சுற்றி மேய்ச்சல் செய்வதாகவும் குவாரி அருகில் தான் கால்நடைகள் நீர் அருந்துவதாகவும் தெரிவித்து குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை என்று தெரிவித்தார்.

13. **திரு. திம்மராஜ், அடவிசாமிபுரம் கிராமம்**

150 மீட்டர் தொலைவில் தான் தனது குடியிருப்பு இருப்பதாகவும் குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் போது குவாரியிலுருந்து தண்ணீர் தந்து உதவுவதாகவும் தெரிவித்தார்.

14. <u>திரு. திம்மப்பா, கமனப்பாளையம் கிராமம்</u>

இக்குவாரி அருகில் தன் குடியிருப்பு இருப்பதாகவும் இக்குவாரி திட்டத்தால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் குவாரி இயக்கத்திற்கு அனுமதி கொடுக்கலாம் என்றும் கூறினார்.

15. <u>திரு. நாகராஜ ரெட்டி, மருதாண்டப்பள்ளி கிராமம்</u>

குவாரி செயல்பாட்டிற்கு எதிராக 2022 முதல் போராட்டம், மேற்கொள்வதாகவும் குவாரியில் நிறைய பிரச்சனைகள் இருப்பதாகவும் தெரிவித்தார். குவாரிக்கு அருகில் கோவில், நதி, ஊர்கள் இருப்பதாகவும் தெரிவித்தார். மக்களுக்கு தெரியப்படுத்தாமல் ரகசியமாக இக்கருத்துகேட்புக் கூட்டம் நடத்துவதாக தெரிவித்தார். குவாரி முறையாக செயல்படவில்லை நேரில் ஆய்வு செய்யுமாறும் வேண்டுகோள் வைத்தார். 2022-23 முதல் 4 வருடமாக குவாரிக்கு எதிராக போராடிக்கொண்டிருப்பதாக தெரிவித்து நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார். போர் ப்ளாஸ்ட் செய்யும் போது 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தனது வீடு விரிசல் ஆனதாகவும், கனரக வாகனங்கள் அதிக டன் லோடுகள் ஏற்றி செல்வதாகவும் இதனால் கிராம மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

16. <u>திரு. சிவராஜ், ஜெகாருப்பள்ளி கிராமம்</u>

குவாரி இயக்கத்தினால் 60–70 குடும்பங்கள் நன்றாக இருப்பதாக தெரிவித்தார். குவாரியினால் வேலை வாய்ப்புகள் கிடைப்பதாகவும், எந்த பாதிப்பும் இல்லை எனவும் கூறினார்.

17. <u>திரு. வினோத், அடைக்கலாபுரம் கிராமம்.</u>

இவர் முன்மொழியப்பட்ட இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததுடன் இக்குவாரி அருகில் குடி இருப்பதாகவும், குவாரியில் வேலை பார்ப்பதாகவும் தெரிவித்தார். வெடி வைக்கும் போது பாதிப்பு ஏற்படாதவாறு குவாரிக்குள் தண்ணீர் விடுவதாக தெரிவித்தார். கனரக வாகனங்களை இயக்கம் போது சாலைகளில் நீர் தெளித்து இயக்குவதாக தெரிவித்தார். சமீபத்தில் குரட்டுக்கள் என்ற இடத்தில் நடைபெற்ற போராட்டம் ஊருக்குள் கனரக வாகனங்கள் வரக்கூடாது அவற்றை முறைப்படி இயக்க வேண்டும் என்று போராட்டம் நடை பெற்றதே தவிர குவாரி இயக்கத்திற்கு எதிராக அப்போராட்டம் நடைபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

18. <u>திருமதி. ஜெயா நாகராஜ ரெட்டி, மருதாண்டப்பள்ளி கிராமம்.</u>

பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு முக்கியமான நபர்கள் தண்டரை கிராமத்தை சேர்த்த மக்கள் தான் ஆனால் பாதி பேருக்கு இக்கருத்து கேட்பு கூட்டம் நடைபெறுபவதே தெரியாது என்று கூறினார். மறைமுகமான இடத்தில்

இக்கருத்துகேட்புக் கூட்டம் நடைபெறுவதாக தெரிவித்தார். 2022 முதல் போராட்டம் நடத்துவதாக தெரிவித்தார். தான் கிரஷர் கம்பெனிக்கு எதிரானவர் அல்ல என்றும் கிரஷர், அரசு விதி முறைகளை மீறி அதிகப்படியான கனிம வளங்களை எடுப்பதாகவும் குற்றம் சாட்டினார். அரசு நிர்ணயித்த அளவில் வெடி மருந்துகள் உபயோகப்படுத்துவதில்லை என்றும் குற்றம் சாட்டினார். கனிம வளங்களை எடுத்து செல்லும் கனரக வாகனங்கள் அளவுக்கு அதிகமான லோடுகள் ஏற்றி செல்வதாகவும், அதிக வாகனங்களை இயங்குவதாகவும் கூறினார். இதற்கு எதிராக 2022 ல் 8 நாட்கள் தொடர்ந்து போராட்டம் மேற்கொண்டதாக தெரிவித்தார். இதற்கு முன் பேசியவர் சமீபத்தில் குரட்டுக்கள் என்ற இடத்தில் நடைபெற்ற போராட்டம் ஊருக்குள் கனரக வாகனங்கள் வரக்கூடாது அவற்றை முறைப்படி இயக்க வேண்டும் என்று போராட்டம் நடை பெற்றதே தவிர, குவாரி இயக்கத்திற்கு எதிராக அப்போராட்டம் நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறு என்று கூறினார். ஏனென்றால் குவாரியினால் குழந்தைகளுக்கு சுவாச பிரச்சனை ஏற்படுவதாகவும் கர்ப்பிணி பெண்கள் 2 பேருக்கு கருக்கலைப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இது தொடர்பாக 2022 மனு அளித்துள்ளதாகவும் தெரிவித்தார். கூட்டம் சார்ந்த தகவல் முன்கூட்டியே தெரியாமல் திடீரென தெரிந்ததால் பழைய மனு ஆதாரங்கள் கொண்டு வர முடியாமல் போனதாக தெரிவித்தார். மேலும் கிரஷரால் வேலைவாய்ப்பு கிடைக்கிறது என்பதும் முற்றிலும் பொய் எனவும் கிரஷரில் வட மாநிலத்தவர்

தான் வேலை செய்வதாகவும் கூறினார். குவாரியினால் கால்நடை வளர்ப்பு பாதிப்பதாகவும் அதனால் தங்களது பொருளாதாரம் பாதிக்கிறது என்றும் தெரிவித்தார். சுரங்க துறை நிர்ணயித்த வெடி அளவை விட அதிக வெடி மருந்து பயன்படுத்துவதாக தெரிவித்தார். கிரஷரால் தண்டரை பஞ்சாயத்து வளர்ச்சியடையவில்லை என்று கூறினார். நிலத்தடி நீர் பதிப்படைவதாவதாக தெரிவித்தார் அரசு விதிமுறைகளை மீறி குவாரி இயக்குவதால் இகுவாரிக்கு அனுமதி தரக்கூடாது என்றும் கூறினார்.

19. **<u>திரு. முனிராஜ் அடவிசாமிபுரம் கிராமம்</u>**

முன்மொழியப்பட்ட குவாரி அமைந்துள்ள சர்வே எண் அருகில் தான் தன் நிலம் இருப்பதாகவும் இதனால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் கூறினார். கிரஷர் குறித்து புகார் தெரிவித்தாலும் உரிமையாளர் அப்பிரச்சனைகளை சுமூகமாக தீர்ப்பதாக தெரிவித்தார். கனரக வாகன சாலைகளில் நீர் தெளித்து பயன்படுத்துமாறு அறிவுரை கூறினார். எதிர் காலத்தில் எந்த பிரச்னையும் எழாதவாறு குவாரியை இயக்குமாறு கேட்டுக்கொண்டார்.

20. **<u>திரு. முனிராஜ் அடவிசாமிபுரம் கிராமம் (மற்றொருவர்)</u>**

குவாரியில் 8 ஆண்டுகளாக பணிபுரிவதாக தெரிவித்த அவர், 200 மீட்டர் தொலைவில் தன் குடியிருப்பு இருப்பதாகவும், குவாரியினால் எந்த பாதிப்பும் இல்லை என்றும் தெரிவித்தார்.

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.

இதன்பின்னர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள், திட்டம் குறித்து பொதுமக்கள் கூறியதை தொகுத்து சுருக்கமாக கூறினார். மேலும், இப்பொதுமக்களின், ஆலோசனைகள் வீடியோ கிராஃபி மூலம் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் மதிப்பீட்டு ஆணையத்திற்கு ஒலி மற்றும் ஒளி வடிவில் அனுப்பப்படும் என்றும் தெரிவித்தார். பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட எழுத்துப்பூர்வ கருத்துக்களையும் இதனுடன் சேர்த்து அனுப்பப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும், இப்பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் நடவடிக்கை குறிப்பின் நகலானது பொது மக்களின் பார்வைக்காக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் – கிருஷ்ணகிரி, தளி ஊராட்சி ஒன்றிய அலுவலகம், தேன்கனிக்கோட்டை தாலுகா அலுவலகம், தண்டரை கிராம ஊராட்சி அலுவலகம், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஓசூர், ஆகிய இடங்களில் வைக்கப்படும். மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய இணையதளமான www.tnpcb.gov.in ல் வெளியிடப்படும். நடவடிக்கை குறிப்பின் மீதான கருத்துக்கள் ஏதேனும் இருந்தால், உறுப்பினர் செயலர், மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் –தமிழ்நாடு / MoEF&CC மற்றும் சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரருக்கும் நேரடியாக அனுப்பலாம் என்று மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அவர்கள் கூறினார்.

இறுதியாக, வருவாய் கோட்டாட்சியர் அவர்கள், சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிப்பு, 2006 இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் நடைமுறைகளின்படி, கருத்துக்கள் ஏதேனும் இருப்பின் அவை எழுத்து மூலமும் சமர்ப்பிக்கலாம் என தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**ஓசூர்.**

**சார் ஆட்சியர்,**
**ஓசூர்.**

**மாவட்ட ஆட்சியர்**
**கிருஷ்ணகிரி மாவட்டம்**

<u>இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.</u>

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 03.06.2026).
2. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (10 பக்கங்கள் 86 நபர்கள்)
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் ஒலி மற்றும் ஒளிப்பட பெண்டிரைவ்.
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.

5. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
6. பொதுமக்கள் தன்னார்வ தொண்டு நிறுவனம் / சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடமிருந்து மின்னஞ்சல், அஞ்சல் மற்றும் பொது மக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 07 மனுக்கள்.